I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE
DEPOSITIONS OF WITNESSES
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
DEPOSITIONS OF WITNESSES P.W.2
M.C.O.P.NO.357/2023

| | | |
|---|---|---|
| Name | : | திரு.விஜயன் |
| Father Name | : | திரு.சீனிவாசன் |
| Age | : | 49 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 24.06.2026

இரு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்

விசாரணை தொடங்கிய நேரம் : 01.02 P.M

**முதல் விசாரணை**

பிரமான வாக்குமூல விவரம் நான் சொன்னது தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். என்னுடைய ஆதார் அட்டை நகல் ஒப்படைக்கிறேன். அது Ex.P.18.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வரவில்லை என்றால், சரிதான். மனுதாரர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. இந்த விபத்து குறித்து காவல் நிலையத்தில் நான் புகார் கொடுத்தேனா என்றால், இல்லை. அடிப்பட்ட நபரை நான் மருத்துவமனையில் சேர்த்தேனா என்றால், இல்லை, 108 க்கு அங்கிருந்தவர்கள் தகவல் சொன்னார்கள். போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பெறவில்லை. நான் சம்பவ இடத்தில் இல்லை என்றும், மனுதாரர் குடும்பம் தெரிந்தவர் என்பதால் பார்க்காத சம்பவத்தை பார்த்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. இந்த வழக்கு

குறித்து குற்றவியல் நீதிமன்றத்தில் ஏதேனும் சாட்சியம் அளித்திருக்கிறேனா என்றால், இல்லை. அதிக நஷ்ட ஈடு பெற்றுதரும் நோக்கில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

விசாரணை முடிந்த நேரம் : 01.05 P.M

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டார்.

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.